# கொழும்புப் பல்கலைக் கழகம், இலங்கை
# சட்டபீடம்

## சட்டமாணிப் பரீட்சை (நிகழ்நிலை) – ஆண்டு IV, 2021

## வரிச்சட்டம்
(மூன்று மணித்தியாலங்கள்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. 'பொருளாதார மற்றும் அரசியல் காரணங்களுக்காகத் தமது வரிச் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை அரசாங்கங்கள் மாற்றுகின்றன. எவ்வாறாயினும், பிரஜையொருவனின் வரிச்சுமைகளைத் துல்லியமாக மதிப்பீடுசெய்வதற்கு ஒரு நாட்டின் வருமான வரிச்சட்டமானது சில கொள்கைகள் மற்றும் நோக்கங்களின் அடிப்படையில் காணப்படவேண்டும்.'

   மேற்குறிப்பிட்ட கூற்றின் வலிதாந்தன்மையை ஆராய்க.

   (100 புள்ளிகள்)

2. 2000ம் ஆண்டிலிருந்து *Sweets Biscuits Pvt Ltd* என்ற கம்பனியில் கணக்காளராகத் திரு. தீபல் பெர்ணான்டோ என்பவர் பணியாற்றிவருகின்றார். நிர்வாக அதிகாரியொருவராக, பல்வேறு சலுகைகளைக் கம்பனியிலிருந்து அவர் பெறுகின்றார். அவரின் மாதாந்த சம்பளமாக ரூபா.500,000/= த்தினை கம்பனி அவருக்குச் செலுத்துகின்றது. கொல்பிட்டியில் மூன்று படுக்கை அறைகளைக் கொண்ட வீடொன்று அவருக்கு வழங்கப்பட்டதுடன் அதற்கான வாடகையாக ரூபா.150,000/= கம்பனியால் செலுத்தப்பட்டது. மேலும், மாதமொன்றிற்கு ரூபா.300,000/= பெறுமதியான சாரதி மற்றும் எரிபொருளுடனான வாகனமொன்றும் அவருக்கு வழங்கப்பட்டது. அவரின் பட்ட மேற்படிப்புப் பட்டத்தினைப் பூர்த்திசெய்வதற்காக் கம்பனி ரூபா.500,000/= த்தினை அவருக்கு வழங்கியதுடன் அத்தகைமையுடன் ரூபா.100,000/= மேலதிக கொடுப்பனவுடன் 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் அவர் பிரதம கணக்காளராகப் பதவியுயர்வு பெற்றதோடு அது அவரின் புதிய நியமனச் சம்பளத்துடன் சேர்க்கப்படுகின்றது. அது தவிர, அவரது இரு சகோதரரினால் நடாத்தப்படும் குடும்ப வியாபாரமான தளபாடக்கடையில் சமபங்குகளைத் திரு.பெர்ணான்டோ கொண்டுள்ளார். வேலிசரயில் இருக்கும் அவர்களின் பழைய காட்சியறையை



Scanned with CamScanner

ரூபா.7,500,000/= இற்கு அவர்கள் விற்பனை செய்ததுடன் அத்தொகையினைத் தங்களுக்கிடையில் சமபங்குகளாகப் பிரித்தனர். அவர்கள் வருடாந்த இலாபமாக ரூபா.6 மில்லியனை ஈட்டியதுடன் அதனைத் தங்களுக்கிடையே சமனாகப் பிரித்தனர். மேலும், பம்பலப்பிட்டியிலுள்ள சுப்பர் வங்கியில் ரூபா.2 மில்லியன் பெறுமதியான வங்கி வைப்புக்களைத் திரு.பெர்ணான்டோ கொண்டிருந்தார்.

2020/2021 ஆம் வரிமதிப்பீட்டாண்டிற்கான திரு.பெர்ணான்டோவின் வரிக் கடப்பாடுகளை ஆராய்க.

(100 புள்ளிகள்)

3. 'மீள்விநியோகக் கொள்கையின் மூலமாகச் சமத்துவமின்மையைக் குறைப்பதே மூலதன ஆதாய வரியினை (Capital Gain Tax) மீள அறிமுகப்படுத்தியதன் பின்னணியாகும். மூலதன ஆதாயங்களுக்கு வரிவிதிக்கப்படாவிட்டால், குறிப்பிட்ட தனிநபர்கள் மற்றயவர்களைவிட முன்னுரிமைச் சலுகைகளைப் பெறுவதனால் இது நாட்டின் வரிவருமானத்தின் முன்னேற்றத்தினைக் குறைமதிப்பிடும்.'

நீர் உடன்படுகின்றீரா? மூலதன ஆதாயங்களிற்கு வரிக்கடப்பாட்டினை விதிக்கும் 2017ம் ஆண்டின் 24ம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளினை அடிப்படையாகக் கொண்டு மேற்கண்ட கூற்றினை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்க.

(100 புள்ளிகள்)

4. இலங்கையின் முன்னணித் தொலைத்தொடர்புக் கம்பனியொன்றான M1 (Pvt) Ltd இல் மென்பொருள் வடிவமைப்பாளரொருவராகச் சந்து என்பவன் பணியாற்றிவருகின்றான். பல மென்பாருள் மொழிகள் (multi-software languages) மற்றும் கைபேசிப் பயன்பாடுகள் (mobile applications) வடிவமைப்பதில் அவனது நிபுணத்துவம் காரணமாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு மென்பொருள் வடிவமைப்புச் சேவைகளை வழங்குவதற்காகத் தனது சொந்த மென்பொருள் வடிவமைப்புக் குழுவொன்றினை அவன் வைத்திருப்பதற்கு M1 அவனுக்கு அனுமதியளித்தது.

2020/2021ஆம் வரிமதிப்பீட்டாண்டிற்கான தனது வருமானவரிக் கடப்பாடுகளைப் பற்றி ஆலோசனை வழங்குவதற்காகச் சந்துவினால் நியமிக்கப்பட்ட சட்ட ஆலோசகரென உம்மைக் கருதுக. அவனது **தொழில் மற்றும் கணனி மென்பாருள் வடிவமைப்பு வியாபாரம்** என்பவற்றில் ஏற்பட்ட செலவுகள் பின்வருவன. அவனது வருமானத்திற்கு



Scanned with CamScanner

அனுமதிக்கப்பட வரி விலக்குகள் குறித்து அவனுக்கு ஆலோசனை வழங்குக. உமது ஆலோசனையானது பொருத்தமான ஆதாரங்களால் ஆதாரங்காட்டப்பட வேண்டும்;

அ) M1 (Pvt) Ltd இடமிருந்து ரூபா. 6 மில்லியன் ஆண்டு வருமானம் பெறப்பட்டது. அவனது வருமானத்திலிருந்து அக்கம்பனியானது ரூபா.480,000/= த்தினைப் பிடித்து வைத்தல் வரியைக் (withholding tax) கழித்தது.

ஆ) வியாபாரப் பெயர் பதிவுசெய்தல் தொடர்பான விதிகளை மீறியமைக்காத் தண்டப்பணமாக ரூபா.200,000/= இனை மேல்மாகாண சபைக்குச் செலுத்தப்பட்டது.

இ) வயது முதிர்ந்தவர்களுக்குத் தன்னியக்க மருத்துவச் சேவைகளை வழங்குவதற்காகப் புதிய மென்பொருள் பயன்பாடொன்றின் (new software application) ஆராய்ச்சி மற்றும் உருவாக்கத்திற்கான செலவு ரூபா.550,000/=. பயணக்கட்டுப்பாடுகளின் போதான பல சிக்கல்களைச் சமாளிக்க அப்பயன்பாடு நாட்டிற்கு நன்மை பயக்கும். மேலும், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மென்பொருள் தயாரிப்பிற்கான தனியுரிம உரிமைகளைக் கொள்வனவு செய்வதற்கான செலவு ரூபா.200,000/= மற்றும், சட்ட மற்றும் ஆலோசனைச் செலவு ரூபா.250,000/=.

ஈ) பத்துக் கணனிகளைத் திருத்தம் செய்வதற்கான செலவு ரூபா.400,000/= மற்றும் கணனி வழங்கனுக்கான (server) பராமரிப்புச் செலவு ரூபா.150,000/=. அக்கணனிகளின் எழுத்துப் பெறுமதி ரூபா.1,150,000/= எனக் கணக்கிடப்பட்டது.

உ) ரூபா.10 மில்லியனுக்கு வாகன வாடகை மென்பொருள் கொள்வனவு மற்றும் அம்மென்பொருளைச் சந்தைப்பாவனைக்கு ஏற்றதாக்கும் பொருட்டு அதிலுள்ள பிழைகள் மற்றும் தொழில்நுட்பச் சிக்கல்களைச் சரிசெய்வதற்கான செலவு ரூபா.08 மில்லியன்.

(100 புள்ளிகள்)

5. **(அ) அல்லது (ஆ)** பகுதிக்கு விடையளிக்குக.

(அ) வரி எய்ப்பு மற்றும் வரித் தவிர்ப்பு என்பவை இரு வேறுபட்ட கோட்பாடுகளாயினும், இரண்டினதும் எதிர்மறையான தாக்கங்களானது நாட்டின் வரிவருமானத்திற்குச் சமனான தீங்கு விளைவிக்கும். ஆராய்க.

**அல்லது**



Scanned with CamScanner